1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இம்மாதிரியான தவறுகள் செய்பவர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யுமாறு தமிழ்நாடு வேளாண்மை—தொழில் கழகம் கேட்டுக்கொண்டதன் விளைவாகவும், உள் நாட்டு/வெளிநாட்டு உழுவைகளைத் தேவையான குடியானவர்களுக்கு நியாயமான முறையில் சமமாகப் பகிர்ந்தளிக்கும் நோக்குடனும் "உழுவை (வழங்குதல் மற்றும் விற்பனை) கட்டுப்பாட்டு ஆணை" ஒன்றினை மைய அரசு சமீபத்தில் பிறப்பித்துள்ளனர். இவ்வாணையின் கீழ் எந்த ஒரு நபரும் தான் வாங்கிய உழுவையை அவர் வாங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியின் "எழுதிய முன் அனுமதியின்றி" விற்கக்கூடாது. இச்சட்டத்தை மீறுபவருடைய உழுவை பறிமுதல் செய்யப்படுவதோடு அவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் மேற்படி ஆணையில் வகை செய்யப்பட்டுள்ளது.

Agricultural Information Workshop

*292 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Agricultural Information Workshop was conducted by the Agriculture Department on or about 26th April 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) சென்னையில் விவசாய செய்தி விளம்பர ஆய்வுக் கூட்டம் 25—4—1970 முதல் 27—4—1970 வரை நடைபெற்றது.

திருப்பூர் மின் நிலையம்.

* 589 வினா...திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மின்சார நிலையத்தை 110 K.V. சக்தி கொண்ட மின்சார நிலையமாக மாற்றும் வேலை எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அடுத்த ஆண்டுக்குள் இவ் வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டுக்குள் முடிவடையும் என்று சொன்னார்கள். திருப்பூர் நகரத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் சக்தி 66 கேவி வாட்ஸ்தான் இருக்கிறது. சக்தி குறைவாக இருப்பதால், அடிக்கடி தொழிற்சாலைகளில் வேலை தாமதமாகிறது. இதனால் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்கூடங்கள் இருக்கிற காரணத்தால் 1 ஆண்டுக்குள் வேலை முடியுமென்றிருப்பதை, அதிக ஆட்கள் வேலைக்கு வைத்து 6 மாதத்திற்குள் செய்து முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவரவர்களே, அரசு அப்படிக் கருதிய காரணத்தால்தான் அங்கே பெரிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்கள் கொண்டு வருவதற்கு வேண்டிய ரயில்வே வாகன்கள் கிடைப்பதில் கஷ்டமாக இருக்கிறது. கூடியவிரைவில் செய்து முடிக்க முயற்சிக்கப்படும்.

பள்ளிக்கொண்டா ஊராட்சிக்கருகில் விபத்து.

* 590 வினா : திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 31—10—1971 அன்று காலையில் சென்னை—பங்களூர் நெடுஞ்சாலையில் பள்ளிக்கொண்டா பஞ்சாயத்திற்கருகில் வாகன மோதலால் அடிபட்டு இறந்த ஒருவரின் சடலம் கிடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், மோதிவிட்டு ஓடிவிட்ட நபர் (Hit and Run) யாரென கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு .எம். ஏ. லத்தீப் : இப்படி மோதி விட்டு ஓடிப்போன நபர் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? செத்தவர் யார் என்று கண்டு பிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. பெரியப்பக்கவுண்டர் மகன் கணேசன் என்பவர் அப்படி மோதி ஓடி